காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணு

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 தை 14 (27-1-74) | இதழ்: 29

★

உள்ளே......

முடியும்; முயன்ருல்!
(தம்பிக்கு அண்ணுவின் மடல்)
★
மாயை மறைந்தது!
(தலையங்கம்)
★
வள்ளுவரும் வாழ்வியலும்
(கட்டுரை)
★
கண்ணீர்த் துளிகள்
(சிறுகதை)
★
மெல்லிய காதல்
(தொடரோவியம்)

★

மூத்தவனின் மூன்று மந்திரங்கள்

(கவிஞர் இராம. மறைமுதல்வன்)

கடமைதனைக் காக்கவந்த கண்ணன்; நல்ல
கருணைதனைப் பொழியவந்த அண்ணன்; மக்கள்
மடமைதனைப் போக்கவந்த அறிஞன்; மனதில்
மகிழ்ச்சிதனைக் கொடுக்கவந்த பெரியோன்; செயலை

நடைமுறையில் காட்டவந்த நல்லோன்; நயமாய்
நாவினிக்கப் பேசிவந்த நல்லோன்; பெருத்த
படைகளின்றி வெற்றிகொண்ட வீரன்; புனிதப்
பார்முழுதும் போற்றப்பெறும் தீரன்; சூரன்!

கண்ணியத்தைப் பேணவந்த திலகன்; தமிழில்
கற்ருேர்க்குக் கைகொடுத்த புலவன்; ஞானக்
கண்ணுன கழகத்தின் தலைவன்; கண்ணின்
குறும்பான பார்வைதந்த அழகன்; நாட்டில்

எண்ணற்ற தம்பிகட்கு அண்ணன்; கற்பனை
எழுத்தாலே உயர்ந்திட்ட கவிஞன்; புகழும்
பொன்னுன குணங்கொண்ட மன்னன்; ஏற்றிப்
போற்றுகின்ற தமிழ்த்தாயின் புதல்வன்; முதல்வன்!

கட்டுப்பாட் டைக்காத்த மனிதன்; பெரிய
காரியத்தை முடித்துவைக்கும் புனிதன்; உணவுத்
தட்டுப்பாட் டைநீக்கிய புண்ணியன்; நாட்டை
தமிழ்நாடாய்மாற்றிவைத்த திண்ணியன்;மண்ணில்

பாட்டிசைக்கும் பாவலர்க்குப் பண்ணன்; அழகுப்
பாரெல்லாம் சுற்றிவந்த அண்ணன்; நல்வழி
காட்டவந்த காந்திக்கு நிகரோன்; அவன்பொற்
கருத்துக்கள் பாரெல்லாம் அறியும்; பரவும்!

★

விலை: 0-25 காசு

வள்ளுவரும் வாழ்வியலும்

— இரா. குழந்தைவடிவேலு, பி.ஏ., பி.டி.,

வாழ்க்கை என்பது வாழத்தெரிந்தவர்களுக்கு கலை; வாழத் தெரியாதவர்களுக்கு கவலை; கவலையை நீக்கி வாழ்க்கையை கவின்மிகு கலையாக்கும் பெற்றிமை பெற்றிடச் செய்யும் ஒப்பற்ற உயர்தனிச் செந்நூல் திருக்குறளாகும். அதனாலன்றோ வள்ளுவத்தை வாழ்க்கை நூல் என்று அழைக்கின்றோம்.

பாலினுள்ளே தயிர், வெண்ணெய், மோர் முதலியன அடங்கி இருத்தல் போன்றே வாழ்க்கை என்ற சொல்லினுள்ளே வாழ்க்கையின் விளக்கமும் பொதிந்து கிடக்கின்றன. வாழ்க்கை என்னும் சொல்லைப் பிரித்துப் பார்க்கின் பல்வேறு தத்துவங்கள் பளிச்சிடுகின்றன. "வா" என்ற முதலெழுத்தே எப்பாலரையும் வாழ்வதற்கு வாவென்று அழைக்கிறது. பின்னர் "வாழ்" என்றும் நம்மை வாழ்த்துகிறது. பிறகு "ழ்" "க்" என்ற இரு ஒற்றெழுத்துக்களை நீக்கிப் பார்க்கின் "வாகை" என்றாகும். வாகை என்றால் வெற்றி என்று பொருள்படும். வாழும் வாழ்க்கை வெற்றியோடு அமைதல் வேண்டும். பின்னர் "ழ்"என்ற ஒற்றெழுத்தை மட்டும் நீக்கிடின் "வாக்கை" என்றாகும். "வாக்கை" என்பது நாநலத்தைக் குறிக்கிறது; வாகையோடு வாழ்ந்திட நாம் மற்றவர்களுக்குக் கொடுத்த வாக்கை நாணயத்தோடு காப்பாற்ற வேண்டும். "ா" "ழ்" "க்" என்ற இம்மூன்று எழுத்துக்களையும் விலக்கியபின் "வகை" என்றாகும். வகையென்றால் முறை என்று பொருள்படும். அஃதாவது இந்த வகையில்தான் வாழ வேண்டும் என்று வாழ்வை நெறிப்படுத்தி வாழ வேண்டும். நல்ல வகையான வாழ்க்கை அமைந்தால்தான் வாகை பெறமுடியும்; வாக்கையும் காப்பாற்ற இயலும்.

வாழ்க்கையில் நம்பிக்கைவைத்து வாழ்தல் வேண்டும்; அதுவும் தன்னம்பிக்கையோடு வாழ வேண்டும்; இன்றேல் வாழ்க்கை வழுக்கையாகிவிடும். தும்பிக்கை இல்லா யானையின் வாழ்வு முடமாதல் போல் நம்பிக்கையில்லா வாழ்வும் முடமாவது திண்ணம். இவை அனைத்திற்கும் வள்ளுவம் நமக்கு வழி காட்டுகிறது.

இலக்கியவாதியின் கருத்துக்கள் வாழ்க்கைக்குத் தெளிவான சிந்தனையை மலர்விக்கும். பாம்பின்கால் பாம்பறியும் என்பதைப் போல் ஒரு கவியுள்ளத்தை இன்னொரு கவிதான் தொட்டுப் பார்த்து சொல்லமுடியும். பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்த மகாகவி பாரதி "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்" என்று வள்ளுவரை நடுநாயகப்படுத்தி பாவிசைத்தார். இன்னும் வள்ளுவரை மொழி, இனம், மதம், தேசம் என்ற குறுகிய எல்லைக்கோட்டிற்குள் நிறுத்தாமல் உலகத்திற்கே பொதுவாக்கி

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று தமிழினம் தலைநிமிர முழங்கினர்.

"எல்லாப் பொருளும் இதன் பாலுள, இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையா" என்றார் மதுரைத் தமிழ்நாகனார். முற்பட்டதாகிய நன்னெறியை நாமறியும் பொருட்டு முப்பால் நாயனாரால் சொல்லப்பட்ட இனிய குறள் வெண்பாக்கள், நினைத்தால் மனதிற்கு இன்பம் செய்வன; கேட்டாற் காதுக்கு இன்பம் செய்வன; ஓதினால் வாய்க்கு இன்பஞ்செய்வன; தொடர்ந்து வருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்குப் பெரிய மருந்துகளாவன என கவுனியனார் திருவள்ளுவ—மாலையில் செப்பிப் போந்தார்.

"சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள் வெண்பா"

"திருவள்ளுவரின் பெயரை உங்களில் ஒரு சிலர் கூட கேட்டிருக்கமாட்டீர்கள். வடநாட்டில் உள்ள மக்கள் அந்த மகானைப்பற்றி ஏதும் அறியார்கள். இது வெட்கப்படவேண்டிய விசயம். குறுகிய இரு அடிகளில் அறிவுச் செல்வத்தை அவர் வழங்கி இருப்பதுபோல் ஒருசில மகான்கள்கூட வழங்கவில்லை"யென காந்திஜி நாகபுரியில் நடந்த அகில இந்திய இலக்கிய மகாநாட்டுத் தலைமை உரையில் உரையாற்றினார்.

அற இலக்கியமாய், அறிவு இலக்கியமாய் உணர்ச்சி இலக்கியமாய் முப்பால் விளங்குகிறது. இறை இயல், இல்லற இயல், துறவற இயல், ஊழ் இயல், அரசியல், அமைச்சியல், அரணியல், அங்க இயல், கூழியல், படையியல், குடியியல், நட்பியல், களவியல், கற்பியல் போன்ற சமுதாயத்தின் பல்வேறு இயல்களைப் பற்றிய செவ்விய கருத்துக்களை சீர்தூக்கி வடித்துத் தந்துள்ளார், வள்ளுவனார்.

இனி செந்நாப் போதார் செப்பிய கருத்துக்களில் சில நோக்குவோம். வள்ளுவர் ஒருநாள் வயல் வெளிப்பக்கம் உலாவச் சென்றார். நெல் நாற்றுகளை நட்டுப் பயிரிட நன்செய் நிலம் ஒன்று பக்குவப் படுத்தப்பட்டு இருந்தது. அவ்வயலின் வரப்பில் ஒருவன் நடந்து வருதலையும் கண்டார்; அவன் வரப்பில் நடந்து வரும்போது வழுக்கி விழுதலையுங் கண்டார்; பின்னர் அவன் ஒரு ஊன்றுகோலினை ஊன்றிக்கொண்டு வழுக்கும் வரப்பினை எளிதில் கடந்து வந்தான். இக்காட்சியைக் கண்ணுற்ற வள்ளுவர் உள்ளம் வாழ்க்கையை இணைத்துப் பார்த்தது. வாழ்க்கை என்பது வழுக்கும் வரப்பைப் போன்றது; வாழ்க்கையில் வழுக்கல் இன்றி நடந்து வரவேண்டுமானால் ஒழுக்கமுடையவர்களது அறிவுரையை ஊன்று கோலாய்ப் பற்றி நின்றால் வாழ்க்கையை எளிதில் கடக்கலாம் என்ற தத்துவம் அவர் உள்ளத்தில் மலர்ந்தது. ஆகவே வாழ்க்கையில் அடியெடுத்து வைப்பவர்கள் நமக்கு

[4-ஆம் பக்கம் பார்க்க]

காஞ்சி வார இதழ்
நிறுவனர்: அறிஞர் அண்ணு

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 27—1—74 | இதழ் 29

மாயை மறைந்தது!

இந்தியா என்ருல் நேரு
ஏந்தலின் திருப்பு தல்வி
இந்திரா தான்என் றெண்ணும்
இப்பெரு நிலைதான் எங்கும்
சந்திர கிரணம் நீங்கும்
தன்மையில் மாறக் கண்டோம்!
தந்திரம் பலிக்க வில்லை;
தர்மமும் பிழைத்த(து) இன்று!

இடைத்தேர்தல் நான்கில் இன்று
'இந்திர சாலம்' தோற்க
உடைந்தது கனவுக் கோட்டை
ஒழிந்தது கர்வப் போக்கு
குடைசாயும் நிலையே பாண்டி,
கோவையில் தொடரச் செய்வோம்!
முடிந்தது கதையும் என்னும்
முடிவுரை எழுத வைப்போம்!

மறைந்தது இந்திரா மாயை
மடிந்தது அகங்கா ரந்தான்!
பறந்தது மானம், காற்றில்!
பாய்ந்தது மார்பில் ஈட்டி
பிறந்தது விழிப்புணர்ச்சி
பிழைத்தது மக்க ளாட்சி
சிறந்தது கலைஞர் எண்ணம்!
செழித்திடும் கழகம் திண்ணம்!!

—மணிவேந்தன்.

மக்கள் மடல்

அன்புள்ள ஆசிரியர்க்கு,

13—1—74 "காஞ்சி" இதழ் கண்டு களித்தேன்; சுவைத்தேன். கவிஞர் மணிவேந்தன் அவர்களின் முகப்பு கவிதை "தேனமுதம் தாராயோ?" தேன் போல் இனித்தது. என்னை இன்ப கிறுகிறுப்பில் ஆழ்த்திவிட்டது. குமுதத்தின் குருட்டுத்தனம் என்ற சாதுப் புலவனின் கட்டுரை தமிழர்களை விழிப்புற செய்யும். புலவர் அரிமதி தென்னகன் அவர்களின் "குட்டிக்கதைகள் ஒரு நூறு!" ஒவ்வொன்று முத்தாபரணத்தின் ஒளிமிகு முத்துக் கள்போல் ஒளிமிளிருகிறது. இளங்கோதாசனின் "அணைப்பு" என்றசிறுகதையும், பொன்னிவளவனின் "என்னடி சிரிப்பு?" என்ற இலக்கிய கட்டுரையும் மிக நன்ருக இருந்தது. மொத்தத்தில் "காஞ்சி" சிந்தனைக்குச் சிறந்த பஞ்சாமிர்தம். தங்கள் தொண்டு மேலும் நீடுபெற்று வாழி!

கலவை, கு. சந்தானம், பி.எஸ்சி.
18—1—74

ஃ ஃ ஃ

அன்புள்ள ஆசிரியர்க்கு,

30—12—74ல் வெளிவந்த "காஞ்சி"யின் தந்தை பெரியார் இரங்கல் மலர் கண்டேன். மணிவேந்தன் அவர்களின் "மாமலை சாய்ந்தது" தலையங்கம் மிக நன்ருக இருந்தது. அண்ணு அவர்களின் "அந்த வசந்தமும்" கலைஞர் அவர்களின் "உலகத்தலைவர் தந்தை பெரியார்" ஆகிய இரு கட்டுரைகளும் சத்தான கட்டுரைகள். அரிமதி தென்னகன் அவர்களின் "அய்யா...! அய்யா! அநாதைகளாக ஆக்கிவிட்டாயே அய்யா!! கட்டுரை நெஞ்சை நெகிழச்செய்தது.

கோவை, குணசேகரன்
5—1—74

ஃ ஃ ஃ

அன்புள்ள ஆசிரியர்க்கு,

6—1—74 "காஞ்சி" இதழைக் கண்டதும் தங்கட்கு மடல் எழுதத் தோன்றியது. மணிவேந்தன் அவர்கள் "குடும்பப் பாதுகாப்புத் திட்டம்" தலையங்கத்தை மிக அருமையாக தீட்டியுள்ளார். அண்ணுவின் தம்பிக்கு மடல் நல்ல விருந்தாயமைந்தது. கு. சந்தானம் அவர்களின் "மான்வாழ மயில் பறந்தது" சிறுகதை 'டேஸ்ட்'டாக இருந்தது நல்ல அருமையான கதை. "மெல்லிய காதல்" தொடர் கதையை தி. நா. அறிவொளி அவர்கள், நல்ல தமிழிலே எழுதுகிருர்; படிக்கப் படிக்க ஆவலைத் தூண்டுகிறது! விறுவிறுப்பாகவும் எழுதுகிருர். வலசை. து. செயராமன் "காதலோ காதல்" கட்டுரை என் நெஞ்சைக் கவர்கிறது.

"காஞ்சி" தமிழகத்தில் தனிச் சிறப்பு பெற்றுத் திகழ உழைப்போம் இது உறுதி!

பெரிய காஞ்சிபுரம், சு. குமரேசன் பி. ஏ.,
10—1—74

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

[2-ஆம் பக்கத் தொடர்ச்சி]

முன்னே வாழ்ந்த நுண்மாண் நுழைபுலம் மிக்க சான்றோர்களின் அறிவுரைப்படி நடந்தால் நிச்சயம் அவர்தம் வாழ்வு பூத்துக்குலுங்கும் புதுமலர்ச் சோலையாய்த் திகழும். இக்கருத்தினையே வள்ளுவர் சொல்லோவியமாய்த் தீட்டினர்.

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்'.

வருமுன்னே காத்துக்கொள்பவன் அறிவாளி; வந்தபின் அதையெண்ணிப் புலம்புபவன் அறிவிலி. தீர்க்கதரிசனத்தோடு வாழ்வது அறிவுடைமை; திட்டமில்லாமல் வாழ்வது மடமை. எவ்வாறு ஒரு சிறிய தீப்பொறி பெரிய வைக்கோல்போரை சாம்பலாக்கி விடுமோ அதைப்போல ஒரு சிறிய குற்றமானது வாழ்வையே குழப்பத்தில் ஆழ்த்தி நாசப்படுத்தி விடும். அவசரமாய் ஒரு தவறைச் செய்துவிட்டு நிதானமாய் அதைப்பற்றி சிந்தித்து வருத்தப்படுபவன் மனிதன். ஆகவே ஒரு சிறிய தவறும் ஏற்படாமல் வாழ்தல் காலச் சிறப்பாகும் என்பதனை வள்ளுவர் மிக அழகாக வடித்துத் தந்துள்ளார்.

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

சினம் என்பது மனிதனின் மனவெழுச்சிகளுள் தலையாய ஒன்று. சினம் கொழுந்துவிட்டு எரியும் போது அதனுடைய தீ நாக்குகள் கிடைத்தவற்றை யெல்லாம் பற்றி எரித்து எளிதில் சாம்பலாக்கிவிடும். கோபம் கொடூரத்தின் கடைசி இருப்பிடமாகும்.

சாலையில் மெதுவாகப் போய்க்கொண்டிருக்கும் வண்டிச் சக்கரத்தின் அடியில் ஒரு கல் தட்டுப்பட்டால் அது தூள் தூளாய் நொறுங்கிவிடும். ஆனால் அதே வண்டி வேகமாகச் செல்லும் பொழுது அதே கல் வண்டியைச் சாய்த்து ஆபத்துக்குள்ளாக்கும்.

அதுபோன்றே வாழ்க்கையென்ற வண்டி நிதானத்தோடு போகும்போது சினம் என்ற கல் தட்டுப்பட்டால் நொறுங்கிவிடும்; நிதானமிழந்து போகும்போது சினம் என்ற கல் வாழ்க்கையையே நாசப்படுத்திவிடும். ஆகவே மனிதன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமெனில் சினத்தைக் காக்கத் தெரிந்தவனாய் இருத்தல் வேண்டும்; இன்றேல் அச்சினம் மனிதனையே கொன்றுவிடும்.

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"—என்றார் நாயனர்.

திருவள்ளுவர் என்ற ஞானக் கதிரவன் ஒளி பட்டால் அறியாமை இருள் அகலும்; அறிவென்னும் சுடர் ஒளிவீசித் திகழும்; அகவாழ்வும் புறவாழ்வும் சிறக்க உலகம் புகழும்!

சென்ற இதழ் தொடர்ச்சி

தம்பிக்கு மடல்

நாலைந்து நாட்களுக்குள், திடீரென அவரை, அந்தப் பக்கத்துக் காங்கிரஸ் தலைவர்கள் மொய்த்துக்கொண்டு, அவரை நம்மிடமிருந்து பிரித்து, காங்கிரசில் சேர்த்து, அவரையே அந்தத் தொகுதியில், நமது கழகத்தை எதிர்த்து நிற்க-காங்கிரஸ் வேட்பாளராக நிற்க—ஏற்பாடு செய்து விட்டனர் என்று அறிகிறேன்.

இஃது, மனித இயல்பு எந்தெந்த வகையாக வெல்லாம் மாறக்கூடியது, கெடக்கூடியது என்பதை மட்டுமல்லாமல், ஓட்டு வேட்டையிலே மட்டும் குறியாக உள்ள காங்கிரஸ் கட்சி எத்தனை விதமான தரக் குறைவான செயலுக்குத்தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் என்பதையும் நாம் உணரும்படிச் செய்கிறது.

இந்தப் புதிய வலிவினைத்தான் அவர்கள் பெரிதும் இன்று நம்பிக்கொண்டுள்ளனர்; கொள்கை வலிவையும் அல்ல; சாதனைகளையும் அல்ல.

அவர்கள் மற்றும் ஓர் விஷயத்தில் மிக அதிகமான அளவு நம்பிக்கை கொண்டுள்ளனர். மும்முனைப் போட்டியைத் தவிர்க்க வேண்டும், காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளுக்குள் ஒரு தோழமைத் தொடர்பும், தொகுதி உடன்பாடும் ஏற்படவேண்டும், காங்கிரசல்லாத ஓட்டுகள் சிதறிவிடும்படி விட்டு விடக் கூடாது என்பதனை நமது கழகம் வலியுறுத்திக் கொண்டு வருகிறது.

கூட்டு என்றும் எதிர்ப்புஅணி என்றும் உடன்பாடு என்றும் பல்வேறு விதமாகப் பெயரிட்டு அழைக்கப்படும் இந்த ஏற்பாட்டுக்கு, நமது கழகம் முதலிடம் கொடுத்திருக்கிறது.

இதற்கான பேச்சு வார்த்தைகள் வளர வளர, கனிவுக்குப் பதிலாகக் கசப்பு வளரும், தோழமைக்குப் பதிலாக பகைமை எழும், என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

கூடுமானவரையில், இந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றி தராத நிலையை உண்டாக்க வேண்டுமென்பதற்காகக் காங்கிரசுக் கட்சி தன்னாலான முறைகளைக் கையாண்டு வருகிறது.

தோழமைத் தொடர்பு கொண்டு, தொகுதி உடன்பாடு செய்துகொள்வதற்காக, பல கட்சிகள் கலந்து பேசும்போது, ஏமாற்றம், எரிச்சல் எழக்கூடும். இதனை எவரும் எதிர்பார்க்கத்தான் செய்வார்கள். ஆனால், கடுமையான விவாதம் நடத்திப் பார்த்து, இறுதியாக தோழமையான ஒரு முடிவுக்கு வர முடியும் என்று கழகம் நம்புகிறது.

காங்கிரஸ் தலைவர்கள்-பெருந் தலைவர்கள்—பேச்சு வார்த்தை வெற்றி பெறாது—மனக் கசப்பிலேதான் அது கொண்டு செல்லும் என்று கருதுகிறார்கள்.

அதற்காக, தட்டிக் கொடுத்தல், தடவிக் கொடுத்தல், தூதுவிடுதல், தூபமிடுதல் ஆகிய முறைகளை இப்போதே அவர்கள் நடத்திக்கொண்டு வருகின்றனர்.

ஆயிரம் தடவை கூடிப் பேசினாலும் அண்ணாதுரை அசைந்து கொடுக்கமாட்டான்—என்று பிற கட்சிகளிடமும் உங்கள் அண்ணாத்துரை அசடன்—பிற கட்சிகளின் பச்சைச் சிரிப்பிலே மயங்கிப்போய், பல இடங்களை விட்டுக் கொடுத்துவிடுவான்—என்று கழகத் தோழர்களிடமும், காங்கிரசின் தலைவர்கள்—மாவட்ட அளவிலே உள்ளவர்கள்—இப்போதே பேசிக்கொண்டுள்ளனர். அறிந்திருக்கிறேன்.

நமது கழகத்திலே, தம்பி! வெள்ளை உள்ளம் கொண்டவர்கள், கள்ளங் கபடமற்றவர்கள், ஏராளம். அவர்களைத் தூண்டிவிடுவது எளிதான காரியம் என்று, அந்தக் கலையிலே வல்லவர்களான காங்கிரசார் எண்ணிக் கொண்டுள்ளனர். நமது கழகத் தோழர்களுக்கு 'ரோஷம்' எழச் செய்துவிடுவதன் மூலமே, நமக்கும் சுதந்திரக் கட்சிக்கும் உள்ள தோழமைத் தொடர்பைக் கெடுத்துவிட முடியும் என்று கடைசி வரிசைக்காரர் அல்ல, முதல் வரிசைக்காரரான காமராஜரே நம்பித்தானே பேசி வந்திருக்கிறார்; "கழகத் தொண்டர்களே! எப்படி ராஜகோபாலாச்சாரியாருடன் நேசமாக இருக்க முடிகிறது? உங்களை அவர் குரங்கு என்று ஏசுகிறாரே!!" என்று பேசினார். தாம் பெற்றுள்ள உயர்வான இடத்துக்கும் இவ்வளவு மட்டமான சிண்டு முடியும் பேச்சுக்கும் துளிக்கூடப் பொருத்தம் இல்லையே என்று யோசித்தாரா? இல்லை! ஏன்?

முடியும்; முயன்றால்!

இந்தப் பேச்சைக் கேட்டு, முன்னேற்றக் கழகத்திலே ஒரு பத்துப் பேர் 'ரோஷம்' கொண்டு, சுதந்திரக் கட்சியுடன் 'கூட்டு' கூடவே கூடாது என்று பேச மாட்டார்களா, எதிர்ப்புக் கிளப்பமாட்டார்களா! என்ற ஆசை, அப்படி எவரேனும் ஒருவர் எதிர்ப்புக் கிளப்பினால், ஒரு எட்டு நாளைக்கு அவர் 'கொட்டை எழுத்து' விளம்புரம் பெறுவார்!! அதற்கு ஆசைப் பட்டுக் கொண்டு சிலர் கழக அணியிலிருந்து பிளந்து கொண்டு வெளிவ்ருவார்கள் என்றெல்லாம் எண்ணம், அவருக்கு—காமராஜருக்கு!!

எங்களை ஆச்சாரியார் சொன்னது போலத் தானே ஐயா! உம்மைப் பற்றி, காங்கிரஸ் வட்டாரத்திலும், குறிப்பாக இதழ்களிலும் கூறுகின்றனர் என்பதை நான் கூறி சான்றுக்காக, ஆனந்தவிகடனில், காமராஜரை, அனுமார் போலவே படம் போட்டு வெளியிட்டிருந்ததை எடுத்துக் காட்டினேன். காமராஜர் வாய்மூடிக் கொண்டார்! ஆனால் மறுபடியும் சில தினங்களுக்குப் பிறகு மறுபடியும் அதே பேச்சு! அதே மூக்கினைச் சொரிந்துவிடுகிற வேலை!!

இப்போது 'சிண்டு முடிந்திடும்' கட்டம் முடிந்து விட்டது; பங்குச் சண்டை கிளப்பிடும் கட்டம் வந்து விட்டிருக்கிறது. ஆகவே இப்போது காமராஜரும் அவரால் பயிற்சி அளிக்கப்பட்டவர்களும், கழகத்துடன் தோழமைத் தொடர்புகொள்ள முனையும் கட்சியினரைக் கண்டு, கனிவான ஓர் பார்வையை வரவழைத்துக் கொண்டு,

> இவ்வளவு நேசம் காட்டுகிறீர்களே, உங்களுக்கு இல்லையா?
>
> இவ்வளவு பாசம் காட்டுகிறீர்களே பதினைந்தே இடம்தானா உங்களுக்கு?
>
> உங்களுடைய உதவியில்லாமல் கழகம், எண்ணி எட்டு இடத்திலே கூட வெற்றி பெற முடியுமா?
>
> ஏமாந்து விடாதீர்கள்—உங்கள் இடங்களை விட்டுக்கொடுத்து விடாதீர்கள்?

என்ற இந்த விதமான பேச்சினை அவிழ்த்துவிடுகிறார்கள். அதைக்கேட்டு, அந்தக்கட்சிகள், இடம் கேட்பதிலே பிடிவாதம் காட்டவேண்டும், அதன் காரணமாகத் தொடர்பு முறியவேண்டும், தோழமை கெடவேண்டும் என்பது அவர்களின் நோக்கம். இத்தகைய கலகப் பேச்சுக்கு, கட்டுப்பாட்டுடன் வளர்ந்து, அரசியல் நோக்குடன் நடத்தப்பட்டு வரும் கட்சிகள் பலியாகிவிடமாட்டா! ஆனால் வெறும் தேர்தல் வேலைக்காக மட்டும் வடிவம் கொள்ளும் கட்சிகளும், வலிவு காட்டும் தலைவர்களும், சுலபத்திலே பலியாகிவிடுவார்கள்.

> ஆகவே, ஒவ்வொரு கட்சியும் தத்தமக்கு என்று இடம் கேட்டு, விவாதம் நடத்தும் போது, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் நோக்குடனேயே இந்தத் தோழமைத் தொடர்பு உருவாக்கப்படுகிறது என்ற பொது உண்மையை மறவாமல் இருந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
>
> நமக்கே உரித்தானது என்று நாம் எண்ணிக் கொண்டுள்ள இடம் சில நமக்குக் கிடைக்காது போய்விடினும், அந்த இழப்பின் மூலம், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் காரியத்துக்கு வலிவு கிடைக்கும் என்றால், தனிப்பட்ட இழப்புகளுக்கும் நாம் நமது மனதைப் பக்குவப் படுத்திக் கொள்ளவேண்டும்.

அதிலும் தோழமைத் தொடர்பும் தொகுதி உடன்பாடும் கொள்ள விரும்பும் கட்சிகள் ஒன்று இரண்டு அல்ல, பல.

துவக்க முதல் தோழமைத் தொடர்பு கொண்டிடும் நோக்குடன் கழகத்துடன் நேசமாக உள்ள கட்சிகள், முஸ்லீம் லீகும், சுதந்திரக் கட்சியுமாகும்.

அடுத்த கட்டத்தில், இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியும் நம்முடன் தோழமைத் தொடர்பு கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்தது.

அச்சம் கூச்சம், தயக்கம் தடுமாற்றம் ஆகியவைகளைக் கடந்து மெள்ள மெள்ள நம்மை நோக்கி தோழமைத் தொடர்புக்காக வருவதற்கு, வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சிக்கும் நாட்கள் அதிகம் பிடித்தன. வந்துகொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் நினைப்பும் தொகுதிப் பங்கீட்டு உணர்வும் இல்லாத சூழ்நிலையிலேயே எனக்கும் தமிழரசுக் கழகத் தலைவர் மா. பொ. சிவஞானம் அவர்களுக்கும் நட்பு நெருக்கமானது.

தமிழரசுக் கழகத்தின் சார்பில் மா. பொ. சி. அவர்களும், தொகுதி உடன்பாடு நோக்குடன் கழகத்துடன் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்துள்ளார்.

சோஷியலிஸ்டு கட்சியும் பிரஜா-சோஷயலிஸ்டு கட்சியும், தொகுதிகள் குறித்துக் கழகத்துடன் பேச விருப்பம் தெரிவித்து நாள் குறிப்பிடும்படி எழுதி இருக்கிறார்கள்.

தம்பி! தொகுதி உடன்பாட்டுக்காகவும் தோழமைத் தொடர்புக்காகவும் கழகத்துடன் பேச்சு வார்த்தை நடத்த இதுபோல கட்சிகள் பலவும், வேறு தனிப்பட்ட நண்பர்களும் விருப்பம் தெரிவிக்கும் போது எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது என்றாலும்,

> இத்தனைக் கட்சிகளுக்கு இடையில், இன்னின்ன கட்சிகளுக்கு என்று எப்படித் தீர்மானிப்பது என்பதை எண்ணும்போது திகைப்பு மேலிடத்தான் செய்கிறது.

காங்கிரசின் பெரிய தலைவர், இந்த நிலைமையில் எப்படியும் சிக்கல் எழத்தான் செய்யும், அதன் காரணமாக முறிவு ஏற்படும், அதன் விளைவாக மாச்சரியம் எழும் என்று எதிர்பார்க்கிறார்; விரும்புகிறார்.

> மும்முனைப் போட்டியைத் தவிர்க்க விரும்புகிறேன் என்பதனாலேயே, நாங்கள் கூறும்நிபந்தனைக்கு உட்படாவிட்டால், நாங்கள் மும்முனைப் போட்டியை மூட்டி விடுவோம் என்று எவரும் மிரட்டிப் பணியச் செய்ய முயற்சிக்கக் கூடாது என்பதனை பணிவுடன், அதேபோது உறுதியாக நான் முன்பே தெரிவித்திருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக என்று நான் எந்தத் தொகுதியைக் கேட்பதாயினும், அந்தத் தொகுதியில்,

கழகத்திற்கு ஏற்பட்டுள்ள தொடர்பு, செல்வாக்கின் அளவு, வகை,

சென்ற தேர்தலின்போது ஏற்பட்ட நிலைமை,

இடையிலே ஏற்பட்டுள்ள கழகப் பிரசார வளர்ச்சி,

கழகம் குறிப்பிடும் வேட்பாளரின் தகுதி திறமை வசதி வாய்ப்பு

ஆகியவைப் பற்றிய விளக்கம் அளித்துத்தான் விருப்பத்தைத் தெரிவிப்பதாக முறை வகுத்துக் கொண்டிருக்கிறேன், மற்றவர்களும் அதுபோன்ற ஒப்புக்கொள்ளத்தக்க ஒருமுறையை மேற்கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

இந்த நோக்கத்தைப் புரிந்துகொண்டு பேச்சு நடத்தினால் சிக்கல் குறைந்து, உடன்பாடு ஏற்பட வழி எளிதாகக் கிடைத்திடும்!

சிக்கல் குறையாது, உடன்பாடு ஏற்படாது என்று காங்கிரஸ் பெருந்தலைவர்கள் கருதுகிறார்கள்; ஆகவே குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

கழகத்துக்கும் தோழமைக் கட்சிகளுக்கும் இடையிலே எழக்கூடிய கருத்து வேற்றுமை பற்றி மட்டுமல்ல, கழகத்துக்கு உள்ளேயே, ஒரே தொகுதியில், இரண்டு மூன்று வேட்பாளர்கள் கிளம்புவர், பிடிவாதம் வளரும், எந்தவிதமாகத் தீர்வு காண்பது என்பது குறித்து தலைமை திணறும், பிளவு வெடித்திடும். பேதம் உருவாகும், அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும்; காங்கிரசின் பெரிய தலைவர்கள் எண்ணிக்கொண்டுள்ளனர்.

ஒரே தொகுதிக்காக இரண்டு மூன்று வேட்பாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்; இது சிக்கலுள்ள பிரச்சினையாகக் கூடும் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை.

இந்த சிக்கலிலே, இறுதியான முடிவினை நானே தெரிவிக்க வேண்டுமெனக் கூறிடும்போது, மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும்கூட இருக்கிறது. என்றாலும், பணிவன்புடன் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்; நிலைமையையும் காங்கிரஸ் கட்சியின் நினைப்பையும் நன்கு எண்ணிப் பார்த்து, என்னுடைய 'முடிவு' வரட்டும் என்று, என்மீதே முழுப் பளுவையும் போட்டுவிடாமல், வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பினை உணர்ந்து, தாமாகவே ஒரு சமரசம் கண்டு, ஒருமித்த முடிவு காணவேண்டும் என்று பணிவன்புடன் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மிக அருமையாக அமைந்துள்ள ஒரு அணியினை, நமக்கென்று ஏற்பட்டுவிட்டுள்ள விருப்பத்தை மட்டுமே பெரிதாக் கருதி,

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவே நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

உடைபடும்படி விட்டுவிடக் கூடாது என்பதனை நினைவுபடுத்துகிறேன்.

அவ்விதம் நமது அணி உடைபட வேண்டும் என்பதே காங்கிரசின் விருப்பம் என்பதையும் நாம் உணரவேண்டும்.

ஆகவே நமது நோக்கம், நமது விருப்பம் நிறைவேறுகிறதா இல்லையா என்பதைக் காட்டிலும், நமக்காக உருவாகியுள்ள அணி; எந்தக் காரணத்தாலும் உடைபடாமல் இருக்கிறதா என்பதிலேதான் இருந்திடவேண்டும்.

இந்த நேர்த்தியான நிலையை நாம் காண்பதற்காக நம்மிலே ஒவ்வொருவரும் தனது நலம், தனது வலிவு, தனது நோக்கம் என்பவைகளைப் பின்னணிக்குத் தள்ளிவைத்து கழகத்தின் பொதுநலனை முன்னணியில் கொலுவிருக்கச் செய்திட வேண்டும்.

நமது கழகத் தோழர்களிலே மிகப் பெரும்பாலானவர்கள், அதிலும் வேட்பாளர்களாகத் தம்மை அறிவித்திருப்பவர்கள். இளமைப் பருவத்தினர்; எளிதிலே கோபதாபத்துக்குத் தம்மை ஒப்படைத்து விடக்கூடிய நிலையினர், ஆகவே அவர்கள் தமது பருவத்திற்கு ஏற்பட்டுள்ள இயல்பினையும் மீறிய, பொறுமை உணர்ச்சியையும், பொறுப்பு உணர்ச்சியையும் காட்டித் தீரவேண்டும்.

மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன், ஆங்காங்கே தோன்றிடும் சிக்கல்களை அந்த அந்த இடத்திலேயே நீக்கிக் கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும்.

எல்லாவற்றையும் மொத்தமாக்கி, உருட்டித் திரட்டி ஓர் பேருருவாக்கி, என்முன் கொண்டுவந்து நிறுத்திவிடாதீர்கள்.

எனக்குள்ள பொறுத்துக் கொள்ளும் உணர்ச்சி வலிவுள்ளது என்றாலும், சிக்கல்களை அறுத்து, எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க தீர்வு அளிப்பதற்கான ஆற்றல் பெரிய அளவில் என்னிடம் இல்லை.

எனக்கென்று சொந்தத்தில் விருப்பு வெறுப்பு அதிக அளவிலே இல்லை என்றாலும், உடன் இருப்போரின் விருப்பு வெறுப்புகளை ஒரே அடியாகத் தள்ளிவிட்டு 'முடிவு' காணும் 'கண்டிப்பு' என்னிடம் போதுமான அளவு இருக்கிறதா என்பதிலே எனக்கே நிரம்ப ஐயப்பாடு உண்டு.

ஆகவே, சிக்கல் எழும் ஒவ்வொரு கட்டத்திலும், அந்தந்த வரிசையில் உள்ள பொறுப்புள்ள கழகத் தோழர்கள், அந்த சிக்கல்களை நீக்குவதற்கான காரியத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்றிடவேண்டும்.

எல்லாம் என்னிடம் விட்டுவிடலாம்—என்ற பேச்சிலே எனக்கு இனிப்பும் கிடைப்பதில்லை, அதனை நான் விரும்புவதுமில்லை; எல்லாவற்றையும் ஏற்ற முறையில் தீர்த்துவைத்திடும் ஆற்றல் என்னிடம் நிரம்ப இருக்கிறது என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை.

ஆகவே, விரைவிலே, ஒரே தொகுதியில் விருப்பம் தெரிவித்துள்ள வேட்பாளர்கள், பொது நன்மையைக் கருதி, ஒரு சமரசம் கண்டறிந்து தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

தம்பி! இப்போது நாம் மிகவும் முக்கியமான கட்டத்தில் அடிஎடுத்துவைக்கின்றோம்.

நமக்குள்ளாகவே உள்ள போட்டிகளைத் தவிர்த்துக்கொள்வதும்,

தமக்கும், தோழமைக் கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்டாக வேண்டிய உடன்பாடுபற்றிய ஏற்பாட்டினைச் செம்மைப்படுத்துவதும்.

இந்த இரு செயல்களிலும், நமது கழகத் தோழர்கள் வேறு எதிலும் மேற்கொள்ளாத அளவு பொறுப்புணர்ச்சியினை மேற்கொண்டாக வேண்டும்.

வெண்ணெய் திரண்டுவரும்போது எத்தனைப் பக்குவம் தேவையோ, அத்தனை நேர்த்தியான பக்குவம் தேவை.

மற்ற கட்டங்களிலே எப்படி நான் விரும்பிய விதத்திலும், மகிழத்தக்க வகையிலும், தம்பி! நீ உன் திறமையைக் காட்டினாயோ அஃதேபோல இந்தக் கட்டத்திலும், உன் திறமையினைக் காட்டிடுவாய், வெற்றியினைப் பெற்றளித்திடுவாய் என்பதிலே நான் உறுதிமிக்க நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

பண பலம், பிரசார பலம், பதவி பலம் மிக்க எதேச்சாதிகார வெறிபிடித்த கட்சியின் பிடியினின்றும் இந்நாட்டு மக்களை விடுவிக்கும் மகத்தான தொண்டிலே, உன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளாய். அதிலே குறிப்பிடத்தக்க அளவு சிறப்புள்ள வெற்றியும் ஈட்டியுள்ளாய்.

உன் சீரிய தொண்டு காரணமாகவே, நாட்டிலே இன்று காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை நல்ல அளவுக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது.

உன் வல்லமையிலே நம்பிக்கை மிகுதியும் இருப்பதாலேயே, பல கட்சிகள் இன்று நமது கழகத்துடன் 'தோழமை' கொண்டிட ஆவலைத் தெரிவித்துள்ளன.

உன் ஆற்றலின் துணைகொண்டு ஆணவ அரசை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை மிகுதியினாலேயே, நமது தோழர்கள், 'நான்—நீ' என்று ஒரே தொகுதிக்கே பலர் போட்டியிட்டுக் கொண்டு, வேட்பாளர்களாக வந்துள்ளனர்.

உன்னால் உருவாக்கப்பட்டுள்ள இந்த நிலைமை, மகிழ்ச்சி தருவது போலவே, இந்த நிலைமையுடன் சேர்ந்து சில சிக்கல்களும் தோன்றியுள்ளன. அவைகளை நீக்கும் பொறுப்பும் உன்னுடையதே! அதற்கான ஆற்றலும் உன்னிடமே உளது!

ரோஜா மலர்ந்திருக்கிறது; முள்ளும் உடன் இருக்கிறது! முள்ளை நீக்கி மலரினைப் பறித்தெடுத்திட வேண்டும், தோட்டம் கண்டு, பாத்திகட்டி, பயிரிட்டு, மொட்டு மலராகும் வரையில் பாதுகாத்திட்ட உன்னால், முள்ளை நீக்கி மலரினைப் பறித்திடவா முடியாது! முடியும் முயன்றால்!!

அண்ணன்,

அண்ணாதுரை

4—12—66

'குட்டிக் கதைகள் ஒரு நூறு!'

25. தந்தால் பெறலாம்

உயரமான மதில்!!

ஏணியின் படிகளைத் துணை யாக்கி ஒருவன் மதிலின் மீது ஏறி விட்டான்.

இனிமையான காற்றின் சுகம் அவனுக்கு கிடைத்தது.

பலரை அவன் பார்த்தான்.

பலர் அவனைப் பார்த்தனர்.

இந்த உயர்வுக்கு அந்த ஏணி தான் காரணம்.

அவன் அப்படி நினைக்கவில்லை.

ஏணிக்கு எரிச்சலாக இருந்தது.

"ஏ ஏ! மனிதா! என்னால்தானே நீ உயரே இருக்கிறாய்!!

இனிமையான காற்றின் சுகம்;

எல்லார்க்கும் அறிமுகம்;

இவையெல்லாம் யாரால் கிடைத்தது.

என்னால்!! என்னால்தானே!! நன்றியில்லா உலகம்!!

அது அவன் காதில் விழவில்லை.

ஏணி சாற்றப்பட்டிருந்த சுவர் இப்படி நினைத்தது:—

"என்மீது நீ சாற்றப்பட்டிருப் பதால்தானே உன்மீது அவன் ஏறினான்.

உன்னை அவன் நினைக்க வேண் டும் என்றால், என்னை நீ நினைக்க வேண்டும்.

இதுவும் இல்லை; எனவே அது வும் இல்லை"

சுவரின் நினைப்பை அறிந்து 'அடிப்படை' சிரித்தது.

26. குத்துவிளக்கு

தெய்வச் சிலைக்கு முன்னால் குத்துவிளக்கொன்று ஏற்றப்படா மல் நின்று கொண்டிருந்தது.

ஒளிவீசிக் கொண்டிருந்த 'டியூப் லைட்' குத்துவிளக்கைப் பார்த்துக் குத்தலாகச் சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்?" குத்துவிளக் குக் கேட்டது.

"நான் மேலே இருக்கிறேன் நீ கீழே இருக்கிறாய்; நீ ஏற்றப்பட் டால் பகவானின் முகம் பக்தர் களுக்குச் சரியாகத் தெரியாது.

என்னால் இங்கு எவ்வளவு ஒளி பார்த்தாயா? நீ எங்கே? நான் எங்கே? இதை நினைத்தால் சிரிக் காமல் இருக்கமுடியுமா?"

அப்போது பூசாரி வந்தான்.

குத்துவிளக்குக்குப் பொட்டிட் டான்; பூவைத்தான்; எண்ணெய் ஊற்றி எரியவைத்தான்; கையெ டுத்துக் கும்பிட்டான்; கடவுளுக்கு முன்னால் எடுத்துவைத்தான்; பிறகுதான் கற்பூரம் எடுத்துக் காட்டினான்.

'டியூப்லைட்' மீது ஊர்ந்து கொண்டிருந்த ஒரு பல்லி "என்ன இருந்தாலும் குத்துவிளக்கு குத்து விளக்குதான்" என்றது.

27. பத்தினி

பாரதப் பிரசங்கம் நடைபெற் றுக் கொண்டிருந்தது.

பாகவதர் ஒரு கட்டத்தை உருக்கமாகப் பக்திச் சுவை சொட் டச் சொட்ட சொல்லிக் கொண் டிருந்தார்.

"கண்ணன் பாண்டவர்களைப் பார்த்து, நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மனதில் இருப்பதைச் சொன்னால் இந்தக்கனி மரத்தின் கிளையில் ஒட்டிக்கொள்ளும் என்றார்.

பாண்டவர்கள் ஐவரும் மனதில் இருந்ததைச் சொன்னார்கள்.

கனிமரத்தில் ஒட்டிக்கொள்ள வில்லை.

ஐவருக்கும் தேவி

அழியாத பத்தினி

திரௌபதி கண்ணனிடம் தன் மனதில் இருந்த ஆசையைச் சொன்னாள்.

கனி மரத்தில் ஒட்டிக்கொண் டது...

பாகவதர் மக்களைப் பார்த்தார்.

மக்கள் பாகவதரின் வாயினையே ஆவலோடு பார்த்தனர்.

மக்கள் மட்டுமா?

பாகவதரின் பத்தினியும்—அப் படித்தான்.

"கண்ணனிடம் திரௌபதி அப் படி என்னதான் சொன்னாள்?"

பாகவதர் செம்புப் பாலால் தன் தொண்டையை ஓரளவு நனைத்துக் கொண்டு தொடர்ந் தார்.

"கண்ணா, நான் ஐவருக்கும் பத்தினியாக வாழ்ந்து விட்டேன்.

ஆனால்,

ஆறுவதாக அந்தக் கர்ணனுக் கும் பத்தினியாக இருக்கவேண் டும் என்ற ஆசையை அடக்க முடியாமல் தவிக்கிறேன்"

திரௌபதியின் ஆசையைத் திவ்வியமாக எடுத்துரைத்த பாக வதர்" இப்படிப்பட்ட பத்தினித் தெய்வங்கள் வாழ்ந்த பாரத நாடு இது" என்று முத்தாய்ப்பு வைத்து முடித்தார்.

பாகவதரின் மனைவி, "திரௌ பதி போன்ற அழியாத பத்தினி தானா நான்!!" என்று மகிழ்ச்சி யடைந்தது பாகவதருக்குத் தெரி யாது.

பாவம் பாகவதர்!!

28. ஓடினான்

விபச்சாரியின் வீட்டுக்கு ஒரு வன் போனான்.

அவளிடம் அவன்,

"நீ ஏன் விபச்சாரியானாய்?" என்று கேட்டான்.

அவள்,

"என் கணவன் விபச்சாரியின் வீட்டுக்குப் போனதால்" என்றாள்

அவன் கண்களில்,

தன் வீட்டுக்குள் எவனெவனோ நுழைவதாகத் தெரிந்தது,

அவ்வளவுதான்!!

அவன் அங்கு நிற்பானா?

(புலவர். அரிமதி தென்னகன்)

கண்ணீர்த்துளிகள்

— முத்துப்பிரியன்

ஜானகி அம்மாள் மறைந்து இரண்டு நாட்களாகி விட்டன.

பெற்று, வளர்த்து, ஆளாக்கிப் பார்த்து, வாழ்க்கையின் உச்சியில் என்னை ஏற்றிவைத்த 'ஏணி' கீழே சாய்ந்து விட்டது.

'கடைசி காலத்திலே இந்தச் சின்னப் பையனாவது கஞ்சி ஊற்ற மாட்டானா' என்று ஏங்கித் தவித்த தாயுள்ளம்—ஏமாற்றப் பட்டு—தன் கண்களை மூடிக் கொண்டது.

என்னை நானே நினைத்துப் பார்க்கிறேன்.

எனக்காக அவள் எவ்வளவு செய்திருப்பாள்! என்னுடைய அண்ணன்களாகப் பிறந்துவிட்ட இருவர் தங்களுடைய வாழ்க்கையில் நல்லத் திருப்பங்களைக் கண்ட பிற்பாடு—என்னை ஒதுக்கி வைத்துவிட்ட நேரத்தில்—என் கண்களில் ஒழுகிய உப்புநீரைத் துடைத்துவிட்டு, தன் மனக்கண்ணில் ஒழுகிய இரத்தக்கண்ணீரை மறைத்த அந்தத் 'தாய்மை'க்காக நான் என்ன செய்திருக்கிறேன்?

கொடுமைகள் பல செய்திருக்கிறேன்! சுமைதாங்கி மாதிரி எனக்காக வாழ்ந்தவளை—இறுதிக் காலத்தில் ஒரு சுமையாகக்கருதி நான் உதறியிருக்கிறேன். 'ரகு இந்த ஜாக்கெட்டு பொத்தலாயிட்டுது.. ஒரு அஞ்சு ரூபாயிலே ஒண்ணு கொண்டாடா...' என்று இந்த முன்னூறு ரூபாய் சம்பளக்காரனைக் கேட்டபோதெல்லாம்-அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல்—மனைவிக்காக சேலை வாங்கப் புறப்பட்டுப் போனவன் நான்! 'சாப்பாடு உங்களுக்கு இவ்வளவுதான்' என்று என் தாயைப் பார்த்து ஒரு 'அளவு' சொல்லப் பட்டபோது-அதைச் சொல்பவள் என் மனைவி, இவளுக்கு என்ன தைரியமிருக்கும்— என்று கூட நினைத்துப் பார்க்காமல் கண்களை இறுக்கிக் கொண்டிருந்த 'மௌனி' தானே நான்!

இத்தனையும் நானா செய்தேன்?

இதயத்தின் அடிவாரத்தில் பீறிட்டெழும் வேதனை உணர்வுகளினால் கண்களின் ஓரத்தில் நீர் சிலிர்க்க ஆரம்பிக்கிறது.

இல்லை. நானாக எதையும் செய்யவில்லை; செய்யவேண்டுமென்ற உணர்வு என்றுமே ஏற்பட்டதில்லை; எல்லாம் என் மனைவிக்காக செய்தேன்—மனைவியால் கட்டாயப் படுத்தப்பட்டேன்.

"ரகு, வேலூர்லே சந்திரா வீட்டிலேயிருந்து ஏதோ 'டூரிஸ்ட்' போறாங்களாம்...என்னையும் கூப்பிடறா...தமிழ்நாடு புராவும் சுத்தி காமிக்கிறாங்களாம் ... போகவர அம்பது ரூபாவாம்...ஒரு எண்பது ரூபா இருந்தா போதும்னு சொல்றாடா..." பெற்ற மகனிடம் உரிமையோடு கேட்டு வாங்கப் பயப்பட்டுக் கொண்டு, சங்கோஜ நிலையில், கெஞ்சுகின்ற தோரணையில் ஒருநாள் அவள் கேட்டபோது, 'இவளுக்குத் தராமல் யாருக்கு நாம் தரப்போகிறோம்' என்று மனங்குளிர என் குனிந்திருந்த உடம்பு நிமிரவும், எதிரில் விழிகளை உருட்டிக்கொண்டு 'வெடுக்'கென்று முகத்தைத் திருப்பும் என் மனைவி சாந்தியைக் கண்டதும் கூனிக்குறுகி நான் உதிர்த்த வார்த்தைகள் அந்த தெய்வத்தை எப்படியெல்லாம் குத்திக்கொன்றதோ!

சுருங்கிப் போய்விட்டதே அவள் முகம்.

"உனக்கு ஏற்கனவே காலெல்லாம் குடைச்சல்னு சொல்றே... இதில வேற 'டூரிஸ்ட்' வேறயா?... அப்புறம் வெளியூர்த் தண்ணியெக் குடிச்சிட்டு இங்கே வந்து படுத்துக்கிட்டா யார் செய்யறது.?"

தண்ணீர் இரைப்பதிலிருந்து, சமையல் செய்வதிலிருந்து, சாமான்களையெல்லாம் கழுவுவது வரை மெல்ல மெல்ல தன்னையொரு வேலைக்காரியாகதே ஆக்கிக்கொண்ட அந்தப் பெற்ற மனத்திற்கு இறுதிக் காலத்தில் செய்யவேண்டியப் பணிவிடைகளைப் பற்றி அப்போதே கணக்குப் பார்த்துப் பேசியிருக்கிறேன்.

பாவி நான்.

"இதப்பாருங்க, அக்கம் பக்கத்திலே இருக்கிற மாமியாருங்க, மருமகள்களுக்கு எவ்வளவுஒத்தாசையா இருக்காங்க...காய் நறுக்கித் தர்றதிலேயிருந்து தண்ணீர் இரைக்கறவரைக்கும் அவங்கெல்லாம் செய்துத்தரவில்லையா?... இவங்க முகத்தைமட்டும் பாருங்க ,...என்னவோ வாரிக்கொடுத்துட்டவங்க மாதிரி..."

படுக்கையில் சாந்தி சொன்ன இப்படிப்பட்ட வார்த்தைகளை எத்தனை முறை காது கொடுத்து உன்னிப்பாகக் கேட்டிருக்கிறேன்.

இரவு நேரங்களில் சொல்லப் படும் வார்த்தைகள் எல்லாம் பகல் நேர்ங்களில் கட்டளைகளாகப் பிறந்திருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் சாந்திதான் காரணம். அவளுடைய அழகில்-மோகத்தில்- மயங்கிக்கிடந்ததால் தானே என் தாயைப்பற்றிய எண்ணங்கள் எனக்கு மறந்துவிட்டன.

இன்றுநான் அழுகிறேன்.

யாருக்குமே இல்லாத அளவுக்கு என் உடம்பில்மட்டும் பாசம் ஒட்டிக் கொண்டிருப்பது போன்ற பாவனையில் 'கண்கள் நீரைச் சிந்திக் கொண்டிருக்கின்றன.

'என்னதான் இருந்தாலும் பிள்ளைமனம் இல்லையா?...' என்று பிறர் சொல்லி அனுதாபம்படும் அளவுக்கு இன்றுக் கத்தித்தீர்க்கிறேன்.

அன்று அவள் கத்தினாளே!

"ரகு, பொண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு ஆடறது நீ ஒருத்தனில்லே...உன்னைப் போலவே எத்தனையோபேர் இன்னிக்கும் செய்துக்கிட்டிருக்காங்கடா... ஆனா அவங்களுக்கெல்லாம் ஏதாச்சும் ஒரு காரணமிருக்கும்...உனக்கு என்ன இருக்கு?...எதைத் தெரிஞ்சு நீ இப்படியெல்லாம் பேசறே?... 'அம்மா சாந்தி—ஏற்கனவே பூக்காரனுக்கு மூன்று ரூபா கொடுக்கணும். அதைக்கொடுத்துட்டுத்தான் இனிமே கடன் வாங்கணும்.

வெளிவருகிறது!

'காஞ்சி'

அறிஞர் அண்ணா – பொங்கல் சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணாவின் படைப்புக்களுடன்
கழகத் தலைவர் கலைஞர்
கழகப் பொதுச்செயலாளர் நாவலர்
மற்றும்
அமைச்சர் பெருமக்கள்
அருந்தமிழ்ச் சான்றோர்கள்
இளைய தலைமுறையின்
இலட்சிய எழுத்தாளர்கள்
அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு தைத்திங்களில் வெளிவரவிருக்கிறது.

கவிஞர் மணிவேந்தன் அவர்களின் "பைந்தமிழே பயிற்று மொழி" சிறப்பு மலரில் இடம் பெறுகிறது.

கவிஞர் தமிழ்ச் சுரபியின் "அண்ணா பிள்ளைத் தமிழ்" தொடரோவியம் சிறப்பு மலரிலிருந்து தொடர்ந்து வெளிவரவிருக்கிறது.

விவரங்கட்கு:

மேலாளர்,
"காஞ்சி" அலுவலகம் :: காஞ்சிபுரம்-3.

அவன் என்னைத்தான் கேட்டுக் கிட்டிருக்கான்னு சொன்னேன்... இதிலே என்ன தப்பு? அதுக்குப் போய் நான் பூவச்சுக்க வேண்டான்னு சொல்றதா 'அந்தப் பொண்ணு சொல்ரு...' அதைக் கேட்டுக்கிட்டு நீ குதிக்கிறே... என்னைப் போய் வெளியே போன்னு சொல்றியே...என்று அவள் கத்தியபோது எந்த பாசவுணர்வும் என்னை அசைக்க வில்லையே!

ஒரு அழுக்குப் பையில் சில கந்தல்களை துருத்திக்கொண்டு— ஒரு தகரப் பெட்டியோடு அவள் வெளியே போனாளே நானென்ன தடுத்தா நிறுத்தினேன்?

"சாந்தி, அம்மா போய் ஆறு மாதங்களுக்மேல் ஆயிட்டுது... எப்படி இருக்காங்கன்னு தெரியலே...என்னமோ பார்க்கணும்னு தோணுது..."— இப்படியொரு நாள் நான் சொன்னபோது எவ்வளவு அலட்சியமாக அவள் பதில் கூறினாள்.

"ஆமா, ரொம்ப நல்லாயிருக்கு நீங்க சொல்லறது...பெத்தபிள்ளைங்க யாருக்கிட்டேயும் இருக்கிறதுக்கு கொடுத்து வைக்கலே...என்னமோ யாரோ சொந்தக்காரங்கன்னு சொல்லிக்கிட்டு ஆறு மாசமா விழுந்துக்கிட்டிருக்காங்க ...சே, கேவலம்...என்னமோ நம்மை விட்டதுன்னு சும்மாயிருக்கணும்..."

நினைத்தாலே நடுங்குகிறது. நெஞ்சைப் பிடித்து கிழித்து எறிந்துவிட வேண்டும்போல் ஒரு துருதுருப்பு உடம்பையே உலுக்கி எடுக்கிறது.

கண்கள் அந்தக் கூட்டத்தையே ஒருமுறை சுற்றி வருகின்றன.

தூரத்தில் சாந்தி நின்றுக் கொண்டிருக்கிறாள். 'மருமகளும் அழுதாள்' என்று பிறர்சொல்வதற்காகவே-கன்னத்தில் கொஞ்சமாகக் கறை படிந்திருக்கிறது.

சாந்தியின் அன்புக்காக—ஆதரவுக்காக—சொல்லப்போனால் எங்களின் அன்னத்திற்காக—காத்துக் கிடந்த என் அம்மாவை, கருணை நிறைந்த வாஞ்சையோடு விழியசைப்பின் சாயலை ஒரேயொரு முறை சாய்த்திருந்தால், நான் இவ்வளவு சீக்கிரத்தில் அவளை இழந்திருக்க வேண்டிய துர்பாக்கியநிலை எனக்கு ஏற்பட்டிருக்காது.

சாந்தியாலே என் அம்மா இறந்து விட்டாள்; எனக்கும் பங்குண்டு.

ஆனால் நான் 'சூழ்நிலைக் குற்றவாளி!'

"சாந்தி, கொஞ்சம் தண்ணீர் கொண்டா..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது என் கைகளில் யாரோ எதையோ தருகிறார்கள்.

கண்கள் அதையே உற்று நோக்குகின்றன; நெஞ்சை மெல்லிய நைலான் கயிறால் இருக்குவது போலிருந்தது. சாந்தி தந்த நீரைப் பருகுகிறேன்--மனதிலிருந்த கனம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது.

"சாந்தி, பெண்ணைப் பெற்றவளும் தாய்தான். நம்மையெல்லாம் பெற்று, வளர்த்து வாழ வைத்ததனாலேயே அவர்கள் தெய்வங்கள்! என் தாயிடம் வந்து வாழவேண்டிய நிலை உனக்கு ஏற்பட்டதாலேயே—என் அம்மா உன் அம்மாவைவிட எந்த வகையிலும் குறைந்தவரல்லர்...பாசம் எங்கும் ஒன்றே...நீ என் தாயை- ஒரு தெய்வத்தை—நிந்தித்தாய், நானும் துணைநின்றேன். செய்யும் பாவங்களை கடைசி நேரத்திலாவது உணர்ந்து—அதற்கு அறிகுறியாக—கண்ணீர்துளிகளை சிந்த வேண்டுமென்பதற்காகவே கடவுள் மரணத்தைப் படைத்தான். நான் செய்த பாவத்திற்காக கண்ணீர் பூக்களை என்தாயின் காலடியில் வைத்துவிட்டேன்... நீயும் வைக்கவேண்டாமா?..."

—இப்படியெல்லாம் சாந்தியிடம் கேட்கவில்லை.

கையிலுள்ள காகிதத்தை அவளிடம் தருகிறேன்.

எனக்கு மட்டும் இனம் புரியாத சிரிப்பு!

காரணம், சாந்தி அழப் போகிறாளே!—அதாவது நான் தந்திருப்பது 'சாந்தியின் தாயார் மரணம் அடைந்து விட்டார்கள்' எனக் கூறவந்த தந்தியல்லவா!

தொடர் கதை:

மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

"முட்டாள் கொக்கு" 'வாய்'விற்பவன். இவன் முகிலனிடம் ஒன்று கிடக்க ஒன்றுகேட்டு விடுவானோ? முகிலன் உண்மையைச் சொல்லிவிட்டால்...? உம்...முகிலனை முதலில் சந்தித்து உண்மையை வெளியிட வேண்டாமென மன்றாடிக் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்! எத்தகைய கொடுமையான சூழ்நிலையில் நான் சிக்கியிருந்தேன். நினைத்தாலே நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறதே! அன்று ஆண்டியிடம் சிக்கியிருந்தால் என்னை நார்—நாராகக் கிழித்து விட்டிருப்பான்! வெறியன்!

சீ!

நானும் அறிவில்லாமல் இப்படிப்பட்ட கீழான மக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு உறவாடியது... உம்...பட்டபிறகுதானே தெரிகிறது!

முரடர்களின் நட்பில்லாவிட்டால் எனக்குப் பாதுகாப்பு எப்படிக் கிடைக்கும்? படித்த நண்பர் வழுதி எவ்வளவு அருமையாக நட்டாற்றில் கையை நழுவ விட்டார்!

போலி நண்பர்களைவிடப் பகைவர்கள் கோடி மடங்கு நல்லவர்கள்!

ஏன்? ஆண்டியை நம்பிப் போயிருந்தால் கூட, யாராவது இதுபோலத் திடீரென வந்திருந்தால், ஒருகை பார்த்திருப்பானே தவிர, இந்த நயவஞ்சகன் வழுதியைப்போல என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டு வேலிதாண்டிக் குதித்துப் பேடி போல ஓடியிருக்க மாட்டான்!

அன்றிரவு நிகழ்ந்தவற்றை யெல்லாம் கொக்குவினிடம் சொல்லிவிட்டால்...அம்மாடி! தொலைந்தேன். இதைவைத்தே என்னை அடிமையாக்கி அடக்கியாளத் தொடங்கி விடுவான்! சே. எனக்கென மனம்விட்டுப் பேசிப் பழகி உரிமைபோடு வாழ ஓர் உயிரும் உலகில் இல்லையே!...என் வாழ்வில் தீராத ஏக்கமாகவே இது ஆகிவிடுமா?

உம்.

வழக்கு தோற்றுவிட்டது, சீ. எவ்வளவு செலவு! எவ்வளவு உழைப்பு! எவ்வளவு முயற்சி!

ஆ! முகிலன் பகைவனானாலும்...

ஓ!

மாண்புள்ள பகைவன்தான்!

பெருந்தன்மை வாய்ந்த அரும் பகைவனை அடைவது ஆருயிர் நண்பனோடு கொஞ்சுவதை விடச் சிறப்பல்லவா?

முகிலனைப் போன்ற திறமையாளனைச் செயல் மறவனைக் காதலிக்க வேண்டும்!

அடடா!

அது ஒரு புதுச் சுவையாக இருக்கும்!

ஆகா!

முகிலன், நான் என்னையறியாமலேயே உங்களைக் காதலிக்கிறேனே! அது ஏன்? எனக்கே புரியவில்லை!

புரியாமல் தோன்றுவதுதான் காதலோ?

உங்களை என்னுள்ளம் வெறுக்கிறது. ஆனால், நான் உங்களைக் காதலிக்கிறேன். வெறுக்கிறேன்!—காதலிக்கிறேன்!—

இதில், எது உண்மை?

இரண்டுமே உண்மையா?

நீங்கள் தீராப்பகைவர்தான் எங்களுக்கு. ஆனால், நீங்களே என் காதலர்! என்னுயிரின் வேட்கை உங்களை அணைந்து இன்புறுவதுதான்! முகிலன், இது நடக்குமா? என் வாழ்க்கை வரலாறு முழுவதும் முகிலனுக்குத் தெரியுமே!

நான் தவறியவள்தான். ஆனால், உங்கள் உயிர்க் காதலிநானே தான்.

எப்படி என்னுள்ளத்தைப் பறிகொடுத்தேன் என்று எனக்கே தெரியவில்லையே!

நான் பிறர் உள்ளத்தைப் பறிப்பதில்தான் ஈடுபட்டிருந்தேன். என்னை அலைவுக்கு உட்படுத்திக் கொள்ளாமல் பிறரை அலைக்கழிப்பதில்தான் இன்பம் கண்டுவந்தேன். இன்று நானே அலைகளுக்கிடையே உழல்கின்றேன்.

அடுத்தவனை நெருக்கடியில் தள்ளி அவனுக்குத் துன்பத்தை உண்டாக்கிக் கொடுத்து, அவன்படும் பாட்டை ஒரு விளையாட்டை வேடிக்கை பார்ப்பது போலப் பார்க்கின்றவர்கள் திறமையாளர்கள் என எண்ணி, அந்தக் கலையில் முதல் வல்லவளாகத் திகழ்ந்தேன் அதே நெருக்கடியும் துன்பமும் தம் வாழ்வில் உண்டானால் அதைப் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை என்பதை உணர்கிறேன்.

குமுறலும், கொதிப்பும், கொந்தளிப்பும், சோர்வும் விஞ்சுகிறது நெஞ்சில்.

என்ன செய்வதென அறியாமல் மனம் பரபரக்கிறது.

முகிலனுக்கு எவ்வளவு நெருக்கடியை, இடையூற்றைத் திடீர் எதிர்ப்பை உண்டாக்கினாலும் அவர் மருள்வதில்லை; திகைப்பதில்லை. அறிவுத் தெளிவோடு அடுத்த கணத்தில் என்ன செயலை ஆற்றுவதென விரைந்து முடிவெடுத்து அச்செயலில் ஈடுபட்டுவிடுகிறார்!

துன்பங்களை, இனிய விருந்தினர்களை வரவேற்பது போலல்லவா முகிலன் வரவேற்கிறார்! ஆ! முகிலன், நீங்கள் ஒரு சீசர்தான்!

வாழ்க்கையில் போராட்டத்தையே கலையாகக் கருதுகிற ஆண்கள்தாம் சுவைமிக்கவர்கள்!

கோழைகளும் வெறியர்களும் அடிமைகளும் தெளிவற்றவர்களும் அலைவு மனமுள்ளவர்களும் சீ! எதற்கு இந்தக் கசடுகள்! வீண்பதடிகள்!

முகிலன், நீங்கள் எனக்கு எளிதில் இசைய மாட்டீர்கள் என நான் நன்கு அறிவேன்.

ஆனல்—நீங்கள் என் பெண்மைக்கு ஒரு குறிக்கோள்! என் உள்ளத்திற்கு ஓர் அறைகூவல்! என் ஆற்றலுக்கு ஒரு மதிப்பீடு!

உங்களை அடைவதே வாழ்வில் நான் பெறும் வெற்றி!

மற்ற ஆடவர்களாகிய முட்டாள்கள் என்னைக் கண்டதுமே காலைப்பிடித்து விடுவார்கள்! மடவர்கள்! ஆனல் நீங்கள் அவர்களிலிருந்து மாறுபட்டவர்.

உங்களை அடையவே வேண்டும்.

நான் மனம் வைத்தால்...

உம்...

அன்றிரவு என்னை எவ்வளவு கண்ணியத்தோடு சென்னைக்கு அழைத்துச் சென்று உதவி செய்தீர்கள்! உங்களைத்தவிர வேறு எவனுவது இருந்திருந்தால் நான் என்னபாடுபட்டிருப்பேனே? ஆண்டவனே! கொடுமை! அஞ்சத்தக்க கற்பனைகளை உண்டாக்காதே.

கீழோர் நட்பு எவ்வளவு கேடுதரும் என்பதை என்னைப்போலப் பட்டுத் தெரிந்துகொண்டவர்கள் எவரும் இரார்.

முகிலனை என்னல் இன்னும் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஏன் அன்றைய நிகழ்ச்சிகளையெல்லாம் எழுதிக் கையெழுத்து வாங்கினர்?

நான் இருந்த நிலையை ஒளிப்படம் பிடித்தது ஏன்?

முகிலன் நோக்கம் நல்லதாயிருக்காது.

ஐயமும் அச்சமும் என் எலும்புக்குருத்திலெல்லாம் தீயாய் எரிக்கிறதே!

ஏறத்தாழப் பிறந்மேனித் தோற்றத்தோடு கூடிய ஒளிப்படத்தைப் பிறர் பார்த்தால் என் நிலைமை என்னுகும்? ஐயோ! எப்படியேனும் அந்தப் படங்களை அழிக்கவேண்டுமே!

நச்சினர்க்கினியர் முகத்தில் விழிக்கவே முடியாதநிலை அமைந்து விட்டது உம்...

சீ. கயவன் வழுதியை அணுஅணுவாகப் பழி வாங்கினல்தான் என்னுள்ளம் ஆறும். பகைவரிடம் ஒரு பெண்—தனக்குத் தன்னையே ஒப்படைத்த பெண்—சிக்கிக் கொண்டபோது அவளைக் காக்க முனையாமல் தன்னைமட்டும் காத்துக்கொள்ளத் தப்பியோடிய பெரிய மறவன்! கோழை! ஆண்மையற்ற பேடி!

ஏன் என்னை உதறிவிட்டு ஓடினன்? நான் காக்க வேண்டிய அளவுக்குச் சிறப்பற்றவள் என்ற எண்ணமா?

என்னைப் பற்றிய 'மதிப்பீடு' அவனுக்கு அப்படியிருந்திருக்குமோ? ஓ!

சே. அந்த நாளை எண்ணினலே நாணமும் மானக்கேடும் வெறுப்பும் எரிச்சலும் ஆற்றுமையும் என்னைக் கசக்கி நசுக்கிப் பிழிகிறதே!

கொடுமை, கொடுமை

தனக்குள் நடுங்கிக் கொண்டாள். சிலிர்சிலிர்த்தது அவள் பொன்மேனி. மயிர்க்கூச்சமெறிய ஒரு முறை ஆடி நின்ருள்.

தாம்பூலத்திற்குச் சிறந்தது

விரைவில் குளித்து எழுந்தாள்.

கவர்ச்சி சிரித்தது.

நாகரிக உடைபூண்டாள். ஒப்பனைகளைப் பொலிவாகவும் பொறுமையாகவும் அருமையாகவும் திருத்தமாகவும் செய்து கொண்டாள்.

கவர்ச்சிக்கு அவள் எழுதிய தீர்ப்புரையாக அவள் காட்சி தந்தாள்.

பாலுவின் ஒளியுமிழும் பேரழகு சீறியெழுந்து மதர்த்து நின்றது.

கண்ணுடி காட்டும் கட்டழகைத்தானே கண்டு கண்டு விழிவிருந்துண்டு மயங்கிய பாலு அப்படியும் இப்படியும் திரும்பிப் பல கோணங்களில் தன்னழகைத்தானே சுவைத்துக் கொண்டாள்.

ஒரு பெருமிதம் வழியும் நிறைவான சிரிப்பு அவள் மாதுளம் பூவுதடுகளில் 'கோடி போயிற்று'

அவள் ஒப்பனை செய்துகொண்ட முறையிலிருந்து, பாலு வெளியே செல்லப்போகிருள் என உய்த்துணர்ந்தான் கொக்கு.

"பாலு, வெளியே போகப் போகிருயா?"

"உம்"

"எங்கே?"

"போகும்போது எங்கே என்று கேட்கலாமா? நாகரிகமாக நடந்துகொள்ள மாட்டாயே நீ"

"எனக்குச் சொல்லக் கூடாதா?'

"சொல்ல முடியாது."

"என்ன பாலு இப்படி வெட்டிப் பேசுகிருய்?"

"புகழேந்தி வீட்டிற்குப் போய், அவர் தந்தை இறந்ததற்கு வருத்தம் தெரிவித்துவிட்டு, முகிலன் வீட்டிற்குப்போய் அவரோடு பேசிவிட்டு மீண்டும் இங்கே வந்து உன்னேடு—"

"போதும் அம்மா! போதும்."

"புகழேந்தி வீட்டிற்குப் போகப் போகிருயா?"

"ஆமாம். அவன் பகைவனுயிருக்கலாம். வெற்றி பெற்ற பகைவன் அவன். அதனல் நாம் பணிந்து நடந்து நல்லபிள்ளைகளாயிருக்க வேண்டும். கொஞ்ச நாள்களுக்கேனும் புகழேந்தியிடமும், முகிலனிடமும் வாலாட்டாமல் இருக்கவேண்டும் நாம்."

(வளரும்)

பெரியார் இரங்கலில் கவிஞர்கள்

அண்ணாவிடம் போயினையோ அய்யா?

(ச. கலியனூர், பொன்மலை)

அஞ்சாமல் அறிவுமொழி செப்பி வந்த
அறிவுமேதை நம்மய்யா சென்ற தெங்கே?
துஞ்சாமல் பகுத்தறிவை அள்ளித் தந்த
தொன்தந்தை நம்பெரியார் போன தெங்கே?

சாதிமதம் சாத்திரத்தை விரட்டி நின்ற
தமிழர்காண் மாமலையே பிரிந்த தெங்கே?
ஆதிவழி பழமைசாடி அறியச் செய்த
ஆன்றபுகழ் ஈரோட்டார் பறந்த தெங்கே?

கலப்புமணம் காசினியோர் காண ஊட்டி
கவின்பாதை வித்திட்டோர் மறைந்த தெங்கே?
மலைபோன்ற சீர்திருத்தம் மனதில் தைக்க
மார்க்கத்தைப் பணித்தய்யா விரைந்த தெங்கே?

ஏற்றமிகு உயர்ஒளியாய் நெஞ்சம் கண்ட
எழுதமிழே! நின்முகத்தை காண்ப தெங்கே?
ஊற்றுகக் கொஞ்சுதமிழ் கொட்டி வந்த
உறவுவிட்டு நீடுபுகழ் கொண்ட தெங்கே?

குன்றேற்ற மாவிளக்கே! கொய்த அன்பே!
கோபுரமாய் நின்றதலைவர்! காத்த பொற்பே!
நின்றிட்ட எமைவிட்டு அண்ணா காண
நீடுதுயில் போயினையோ? காண்ப தெப்போ?

★

சிங்கமா சாய்ந்தது!

(தென்னம்பட்டு. ஏகாம்பரம்)

சிங்கமா வீழ்ந்தது!—சிறிய
சிறுத்தையா சாய்ந்தது!
வெங்கொடுமை சாக்காட்டில்—சுழன்ற
வேங்கையா மடிந்தது!

வானுயர சிந்தனைகள்—தமிழர்
வாழ்வுயர எண்ணங்கள்
மானமே உயிர்மூச்சாம்—கொண்ட
மாமேதை மடிந்து விட்டான்!

சாக்ரடீஸ் போல்பிறந்து—மூட
சாத்திரத்தை எரித்துவிட்ட
வைக்க வீரனவன்
மண்மீது சாய்ந்துவிட்டான்!

சிந்திக்கும் அறிவாற்றல்—சீர்
திருத்த புதுநோக்கு
தந்தையவன் நமக்களித்து—நம்
தரமுயர, பின்அயர்ந்தான்!

சென்றதெங்கோ?

கவிஞர். பி. சி. அசனல்லி

படரிருள் பழமைச் சாயப்
பகலவன் பெரியார் வந்தார்!
முடமெனும் நோய்கள் தீய
முத்தெனுங் கருத்தைத் தந்தார்!
குடமுள மதுவ ருந்திக்
குதிப்பவர் மனந்தி ருந்த
அடமுள செயல்க ளாற்றி
அரும்புகழ்ச் சுமந்தார், போற்றி!

இகழ்வெனுஞ் சாதிப் பேயின்
இடுப்பினை முறித்தே நாளுந்
திகழ்கலப் புமணம் வீசத்
திசையெலாம் உழைத்தா ரன்றோ?
நிகழ்ந்திடும் பொய்மைக் கோலம்
நொறுக்கியே உண்மை யோங்க
சுகமெலாந் துறந்தே நாளுஞ்
சுடர்பணி யாற்றிச் சென்றார்!

பழுத்திடும் பழத்தைப் போல்வார்,
படைத்திடும் அறிவுச் சோற்றால்
கொழுத்திடும் மனித ரெல்லாங்
குணவழி நடந்தா ரன்றோ?
புழுத்திடும் மடமைப் போக்கைப்
புதைத்திட எழுந்த சிங்கம்
விழுத்திட வைத்து விட்டு
விரைந்தெலண் சென்ற தய்யா?

★

மகன்தேடி சென்றிட்டீரோ...!

(கவிஞர். காட்டூர் அன்னையன்பன்)

தந்தைஉம் இழப்பைத் தாங்க
தனயனால் ஆகா தென்று
முந்தியே சென்று விட்டார்
முத்தமிழ் வேந்தர் அண்ணா!
சிந்தையில் உம்மை வைத்த
சிறந்தநல் மகனைத் தேடி
தந்தையே நீரும் இந்நாள்
தனிவழிச் சென்றிட் டீரோ!

இழிவு துடைத்தவர் எங்கே?

(புலவர். த. கு. பத்மநாபன்.)

இழிவினைப் போக்கவந்து
பழிதனைத் தாங்கிநின்ற
அழிவிலா அய்யா இன்று
அயர்ந்துதான் ஏகினுயோ?

ஏழ்மையில் பிறந்து வாழ்ந்து
ஏழைகள் வாழ்வைக்கண்டு
பாழ்படும் ஏழை வாழ்வு
உயர்த்திடப் பட்டாய்பாடு!

சாதியால் உயர்வு தாழ்வு
சாத்திரம் பேசிநாட்டில்
நாதியற் றிருந்த எங்கள்
நலமதை ஏற்றிவைத்தாய்!

மனையிலே வெறுப்பு கொண்டு
துணைதனை விட்டு ஏகி
தினையினும் பற்று இல்லா
துறவிகள் வாழ்வுபெற்ருய்!

ஆலினுள் விதையிலேயும்
அணுவினும் ஒழுக்கமில்லா
லீலைகள் புரியும்யோகி
நிலைபுரிந் தொதுங்கி மீண்டாய்!

துறவறம் மாற்றி மீண்டும்
இல்லறம் புகுந்து ஈரோட்
அறமதாம் நீதிசொல்லும்
அன்புடைத் தலைவர் ஆனுய்!

தாங்கொணு அடிமைநீங்க
காங்கிரஸ்மா கட்சிசேர்ந்து
வாங்கென "கதரை" விற்று
வம்புகள் பலவும் ஏற்றீர்!

"வைக்கமென்" றிடத்தில்சாதி
வெறிகளை நீக்கிவைத்த
நீக்கற நின்றசிந்தை
நெறியரே மறைந்தா போனீர்?

★

'சிங்கப் பெரியார்'

(புலவர். அ. கோவிந்தசாமி.)

கடவுள் இல்லை, இல்லவே இல்லை; என்று
சிங்கமென முழங்கி எமைச் சிந்திக்கச் செய்தீரையா!
கடவுளைப் படைத்தது ஏன் என்றீர்!
சாதியை வருத்ததா உம் சூதென்றீர்!
கடவுளை வணங்குவது கண்மூடிப் பழக்கமென்றீர்!
கடவுளைப் பரப்புவதும் கயமை யென்றீர்!
மண்ணுலக மாந்தரையே மாற்றுவது மாயை யென்று
விண்ணுலகம் புகுந்தீரோ வானவரைத் தூற்றிடவே!
ஏன் பிரிந்தீர்; எமை மறந்தீர்!
எங்களுக்கோர் இறைவனுக நின்றீர் அய்யா!

மாமலை சாய்ந்ததுவோ!

(கவிஞர். கருமலைத்தமிழாழன்)

என்பாதை இதுவென்றே
எவருக்கும் அஞ்சாத
தன்மான அரிமாவே
தலைசாய்ந்து போனுயோ?

இழிவாகச் சமுதாயம்
இகழ்கின்ற நிலையிருந்தோர்
விழித்தெழவேப் பகுத்தறிவு
விளக்கேற்றி வைத்தவனே!

சாதிமத ஏற்றதாழ்வு
சழக்குகளின் வேரறுத்தே
ஆதியெனும் மூடத்தின்
ஆட்டத்தை முடித்தவனே!

பொய்மூட்டைப் புராணங்கள்
பொசுக்கிடுவீர் எனச்சொல்லி
மெய்யறிவு புகட்டிடவே
மேன்மேலும் உழைத்தவனே!

ஆரியத்து சூழ்ச்சிகளின்
அடிப்படையைத் தகர்த்தெறிந்தே
தாரினத்துத் தமிழருக்குத்
தனிநாடு கேட்டவனே!

எம்துணிவை காண்பதற்கோ
எமைவிட்டுப் பிரிந்துசென்ருய்!
நும்முடைய போராட்டம்
வாகைசெய்வோம் அமைதிகொள்க!

★

எங்கு சென்ருய் 'அய்யா'

(இரா. குமரேசன் சோழவந்தான்.)

ஏடெடுத்தே எழுத்தாணி
என்னுடன் சேர்த்தெடுத்து
பாட்டெழுத வைத்தாயே
பாதியில்நீ சென்ருயே
நடெல்லாம் விம்மியழ
நான்கவிதை சொல்லியழ
வீடெல்லாம் விளக்கேற்றி
விரிகதிரே எங்குசென்ருய்?

சாதியில்லை சமயமில்லை
சந்நியாசி கோலமில்லை
பேதமில்லை வேதமில்லை
பேரின்ப வீடுமில்லை
நாதியிலார் வாழ்வுபெற
நானிலத்தார் உயர்ந்துவாழ
பேதமிலா வாழ்வுதந்த
பெரியாரே எங்குசென்றீர்?

தாழ்ந்தவரை வீழ்ந்தவரை
தலைநிமிர வைத்தவரே
ஆழ்ந்தவரே அறிவினிலே
தேர்ந்தவரே என்னய்யா
பாழ்படக் கிடந்தநாட்டில்
பகுத்தறிவு சொன்னவரே
சூழ்துயரில் யாம்தவிக்க
சுடரொளியே எங்குசென்ருய்?

நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்! இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.